செ.வெ.எண்: 21/ஏப்ரல் நாள்: 18.04.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## சட்டமன்ற பொதுத் தேர்தல் 2016-ல் போட்டியிடும் வேட்பாளர்களின் தேர்தல் செலவினக் கணக்குகளை சட்ட மன்றத் தொகுதி வாரியாக சமர்பித்தல் தொடர்பாக அலுவலர்களுடனான ஆலோசனைக்கூட்டம்

## மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (18.04.2016) மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், நடைபெறவிருக்கும் சட்டமன்ற பொதுத் தேர்தல் 2016-ல் போட்டியிடும் வேட்பாளர்களின் தேர்தல் செலவினக் கணக்குகளை சட்ட மன்றத் தொகுதி வாரியாக சமர்பித்தல் தொடர்பாக தேர்தல் நடத்தும் அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:-

நடைபெறவிருக்கும் சட்டமன்ற பொதுத் தேர்தல் 2016-ஐ முன்னிட்டு இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும் தேர்தல் வாக்குப்பதிவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொண்டு தயார் நிலையில் இருந்திடவேண்டும். இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளபடி தமிழகத்தில் வருகின்ற ஏப்ரல் 22-ம் தேதி முதல் 29ம் தேதி வரை சட்டமன்ற பொதுத் தேர்தல் 2016-ல் போட்டியிடும் வேட்பாளர்கள் வேட்பு மனுத்தாக்கல் செய்திட ஏதுவாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். வேட்பாளர்கள் வேட்பு மனுத்தாக்கல் செய்வதற்கு தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, வேட்பு மனுத்தாக்கல் செய்ய வருகை தரும்போது இந்திய தேர்தல் ஆணையத்தின் விதிமுறைகளை பின்பற்றிட வேண்டும். மேலும் வேட்பாளர்களின் தேர்தல் செலவினங்களை முறையாக கண்காணித்து சட்டமன்ற தொகுதி வாரியாக அறிக்கை சமர்பித்திட வேண்டும். எனவே தேர்தல் பணியில் ஈடுபடும் அலுவலர்கள் விழிப்புடன் பணியாற்றி இராமநாதபுரம் மாவட்டத்தில் சட்டமன்ற பொதுத் தேர்தல் 2016-ஐ அமைதியான முறையில் நடத்திட அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியாற்றிட வேண்டுமென மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், கூடுதல் தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அலிஅக்பர், பரமக்குடி தேர்தல் நடத்தும் அலுவலர்/ சார் ஆட்சியர் டாக்டர்.கி.சு.சமீரன், இ.ஆ.ப., இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதிக்கான தேர்தல் நடத்தும் அலுவலர் (வருவாய் கோட்டாட்சியர்) திரு.ராம்பிரதீபன், திருவாடானை சட்டமன்ற தொகுதிக்கான தேர்தல் நடத்தும் அலுவலர் (மாவட்ட வழங்கல் அலுவலர்) திரு.இராஜசேகரன், முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதிக்கான தேர்தல் நடத்தும் அலுவலர் (மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திரு.இராமையா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) திருமதி.சாந்தா உட்பட அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**